# பிரசங்கி

காலம்

| | |
|---|---|
| கி.மு. 971 | சாலொமோனுக்கு ஞானம் அருளப்பட்டது |
| கி.மு. 960 | சாலொமோன் ஆலயத்தைக் கட்டி முடித்தல் |
| கி.மு.935 | சாலொமோன் பிரசங்கிப் புத்தகத்தை எழுதுதல் |
| கி.மு 931 | சாலொமோன் மரணமடைதல். |

**பின்னணி**

சாலொமோன் ராஜா கர்த்தர் கொடுத்த ஞானத்தைக் கொண்டு நீதிமொழிகள் புத்தகத்தை எழுதினார். இந்த விழுந்து போன உலகத்தில் வாழ்க்கையின் விளக்கம் பூரணமடையாமல் இருப்பதாக பிரசங்கிப் புத்தகத்தில் வெளிப்படுத்துகின்றார்.

சாலொமோனின் ஞானம் முக்கிய இடங்களில் காண்பிக்கப்பட்ட போதிலும், வாழ்க்கையானது மாயையானது என்ற தன்மையை வெளிப்படுத்துகின்றார். (3:14; 5:7; 8:12; 12:8, 13). இந்த புத்தகத்தை கவனமாக வாசித்துப் புரிந்து கொள்வோமாகில் சாலொமோன் இதன் மூலம் வலியுறுத்திக்கூற முற்படும் விடயம் **கர்த்தர் இல்லாத வாழ்க்கை பிரயோசனமற்றது என்பதாகும்**.

மாயை என்பதன் அர்த்தர் பிரயோசனமற்ற வாழ்க்கை என்பதாகும். சூரியனுக்கு கீழே என்று குறிப்பிடப்படும் சொற்தொடரானது 27 தரம் கூறப்பட்டுள்ளது,

நான்கு வழிகளில் வாழ்க்கையானது மாயை என்று அவர் குறிப்பிடுகின்றார்.

- அவர் வாழ்க்கையானது மாயை என்று நம்புவதாக கூறுகின்றார். (1:1-11).
- அந்த நம்பிக்கைக்கான அத்தாட்சிகளை அவர் காண்பிக்கின்றார், வாழ்க்கையின் அர்தத்தை காண முயற்சித்த முயற்சிகள் யாவும் வீண் என்று அவர் காண்பிக்கின்றார். (1:12–6:12).

• இந்த அர்த்தமற்ற உலகத்தில் எப்படி எதிர்த்து வாழ்வது என்பதுபற்றிய புத்திமதிகளை அவர் கூறுகின்றார். (7:1–12:8).

• தன்னுடைய கர்த்தர் மீதுள்ள நம்பிக்கையை வாழ்பனுவத்துனூடாக தெரிவிக்கின்றார், வாழ்க்கையின் அர்த்தம் என்பது கர்த்தர்மீதுள்ள நம்பிக்கையும் கீழ்ப்படிதலின் மூலமாகவே கண்டு கொள்ள முடியும் என்று கூறுகின்றார். (12:9-14).

சாலெமோன் தனக்குக் கிடைத்த பெரிய ஞானத்தை தவறாகப்பயன்படுத்தியதன் பயனாக பிரசங்கிப் புத்தகத்தை எழுதவேண்டியதாயிற்று. சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. (5:8-12; 1இரா 11:1-13).

**எழுதியவர்: சாலொமோன்**

• அவர் எருசலேமை அரசாண்ட தாவீது ராஜாவின் மகன். (1:1).

• இவர் கர்த்தரிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொண்டார். (1 இரா3:1-13) அத்துடன் அனேக நீதிமொழிகளையும் எழுதியுள்ளார். (1 இரா4:29-34).

**திகதியும் இடமும்.**

பிரசங்கிப் புத்தகம் சாலொமோனின் கடைசி வருடங்களில் எழுதப்பட்டவையாகும். 935 கி.மு. எருசலேமில் எழுதப்பட்டது.(1:1).

**விஷேசித்த அம்சங்கள்.**

• வாழ்க்கை என்றால் என்ன அதன் அர்த்தம் என்ன என்பதைப்பற்றி பிரசங்கி கூறுகின்றது, எல்ல மதங்களில் உள்ளவர்களும் ஒரு போதனையாக உள்ளது.

- *சூரியனுக்கு கீழ் எல்லாம் மாயையே என்று மீண்டும் மீண்டும் கூறுகின்றது.*

**சுருக்கம்.**

வாழ்க்கை என்பது அர்த்தமற்றது. பிரச்சனைகள். (1:1-11)

வாழ்க்கை என்பது அர்த்தமற்றது : நிறுவல்.(1:12–6:12)

வாழ்க்கை என்பது அர்த்தமற்றது (7:1–12:8)

பிறப்பும் அர்த்தம் அற்றது. (12:9-14)

**வாழ்க்கை அர்த்தமற்றது :பிரச்சனைகள் நிறைந்தது. (1:1-11)**

**1:1-11 "மாயை, மாயை, எல்லாம் மாயை ".**சாலொமோன் தன்னுடைய பிரசங்கத்தை தொடங்குகிறார், " **எல்லாம் மாயையே** " (1:2; 12:8; சங். 39:5-6). இயற்கையின் வளங்களையே சுட்டிக் காட்டி விளங்கப்படுத்துகின்றார். (1:1-7) அத்துடன் மனிதர்களின் அனுபவங்களையும் காண்பிக்கின்றார். (1:8-11). சூரியன் உதிக்கிறது மறைகிறது, வருகிறது போகிறது. காற்று வீசுகின்றது, ஆறுகள் ஓடுகின்றன, ஆனால் அதன்நோக்கம் தெளிவில்லை. மனிதனுடைய அனுபவங்களும், அங்கு இருந்தோம், அதைச் செய்தோம். எல்லாம் அழிந்து போகும். கர்த்தருடனிருக்கும் உறவே நிலைத்து நிற்கும். ஆனால் மக்கள் உலகத்துக்கும் அதனுடைய நிலையற்ற காரியங்களுக்குமே முக்கியத்துவமளித்து இறுதியில் அழிந்து போகிறார்கள் இவர்களை கர்த்தரிடம் கொண்டுவருவதே சாலொமோனின் வாஞ்சையாக உள்ளது.

**வாழ்க்கை அர்த்தமற்றது: நிறுவல். (1:12–6:12)**

**1:12-18** *தன்னைத்தானே அறிந்து கொள்ளத் தீர்மானிக்கின்றார்.* சாலொமோன் ஞானமுள்ள அரசனாக இருந்தபடியால், வாழ்க்கை உண்மையின் அர்த்தமற்றதா என்பதைக் கண்டறிய வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. அவருடைய அனுபவங்கள் வாழ்க்கை அர்த்தமற்றது என்ற முடிவிற்கே வந்தது.

**2:1-3** இது ஒரு சந்தோசமான நேரம்". சாலொமோன் இன்பமாகப் பொழுது போக்குவது நன்மையானது என்று எண்ணினார், ஆனால் அந்த இன்பங்களும் அர்த்தமற்றவை என்ற முடிவிற்கே வந்தார். சந்தோசம் ஒரு மனிதனின் தேவைகளைச் சந்திக்கப் போவதில்லை அல்லது திருப்திப்படுத்தப் போவதில்லை.

**2:4-11** சாலொமோன் பெரும் செல்வத்தை பெற்றுக் கொள்ளும் வண்ணமாக பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார், மேலும் தன்னுடைய ஆசைகளை திருப்தி செய்யும் வண்ணமாக எல்லாவற்றையும் செய்தார், ஆனால் இறுதியில் இவ்வாறு கூறுகின்றார் "என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை".
(2:11).

**2:12-17 ஞானம் நல்லது, ஆனால் நீண்ட காலத்திற்கல்ல**. ஞானமானது என்ன என்றும், பைத்தியமும் மதியீனமும் என்ன என்றும் பார்த்து அறியும்படி சாலொமோன் தேடினான். இருளைப் பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப்பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டான். ஞானியும் மூடனும் விரைவில் மரித்து மறந்துபோகப்படுகின்றார்கள்.

**2:18-23 "பிரயோசனமற்ற காரியங்கள் உன்னுடைய செல்வத்திற்குள் பிரவேசிக்கின்றது."** மரணத்தில் ஞானவானும் மதியீனனும் சமமாக எண்ணப்படுகின்றது, ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான்; ஆகிலும் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொரு **மதியீனனுக்கு அவன் அதைச் தன் மரணத்திற்குப் பின்பு சொந்தமாக விட்டுவிடவேண்டியதாகும்;**

**2:24-26 "ஆனபடியால் அவற்றை இப்போதே அனுபவித்துக் கொள்**. மதியீனன் உன்னுடைய செல்வத்திற்குள் பிரவேசிக்க கூடும், அதனல், மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப்பார்க்கிலும், அவனுக்கு ஒரு

நன்மையும் இல்லை; தேவனுடைய உறவில் நிலைத்திருப்பதே அதுவே நித்திய மகிழ்ச்சியாயிருக்கும்.

**3:1-8 ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு;** பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு; நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு. கர்த்தர் ஏற்ற வேளையில் நமக்கு எல்லாம் செய்வார். ஒரு வேளை எங்கள் விண்ணப்பத்திற்கு பதில் கிடைக்கவில்லை என்றால் அது தேவசித்தமில்லை என்று கருதுவோமாக.

**3:9-15 வருத்தப்பட்டுப் பிரயாசப்படுகிறவனுக்கு அதினால் பலன் என்ன?** மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக் கண்டேன். அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார் அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும்; ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு. (3:14; 5:7; 8:12; 12:13), மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன். புசிப்பதும் குடிப்பதும் மகிழ்வதுமேயல்லாமல் சூரியனுக்குக்கீழே மனுஷனுக்கு வேறொரு நன்மையும் (3:12), இல்லை; சூரியனுக்குக்கீழே தேவன் அவனுக்குத் தந்த ஜீவகாலத்தில் அவன் பிரயாசத்தினால் அவனுக்கு நிலைக்கும் பலன் இதுவே. (3:12-13; 5:18-19; 8:15).

**3:16-22. மனுபுத்திரர் மிருகங்களை விடச் சிறந்தவர்களா?** பின்னும் சூரியனுக்குக் கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதி ஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது. சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன். மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறதுபோலவே அவர்களும் சாகிறார்கள்;ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப்பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது,

எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? சரீரத்திலிருந்து ஆவி ஆத்துமா பிரிந்து தேவனிடம் போகிறது. 3:21

**4:1-3** ***நல்ல விதி*** *?* இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப்பார்க்கிலும் முன்னமே காலஞ்சென்று மரித்தவர்கள் பாக்கியவான்கள். இன்னும் பிறவாதவனுடைய நிலைமையே வாசி.

**4:4-8 பொறாமையும் செல்வதமும்.**

வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம். ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான்; அவனுக்கு உடனாளியுமில்லை, அவனுக்குப் பிள்ளையும் சகோதரனுமில்லை; அப்படியிருந்தும் அவன் படும் பிரயாசத்துக்கு முடிவில்லை . நான் ஒரு நன்மையையும் அநுபவியாமல் யாருக்காகப் பிரயாசப்படுகிறேன் என்று அவன் சிந்திக்கிறதுமில்லை. பிறரின் செழிப்பை, உயர்வைப் பார்த்து எரிச்சல் பொறாமைப்படக் கூடாது. எனக்குரியதை கர்த்தர் தருவார் என்று காத்திருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். பிறருடன் ஒரு பொழுதும் ஒப்பீட்டு பார்க்க கூடாது.

**4:9-12 ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்.**

மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, அவர்கள் ஒன்றாய் இருப்பதே நல்லதாகும். (ஆதி. 2:18). ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே.

**4:13-16 வெற்றிகள் விரைவில் புளிப்பாக மாறிவிடும்.**

வெற்றி என்பது நிரந்தரமானதல்ல ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப்பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி.

**5:1-7 “உன்னுடைய வாயின் வார்த்தைகளில் அவதானமாக இரு**, நீ

தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே!" தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு( எண். 23:21-23; நியா. 11:29-40).

**5:8-12 அநீதியை புறம்பே தள்ளிவிடு.**
இலஞ்ச ஊழல்களைச் சாலொமோன் அவதானித்தார், ராஜாவின் இடத்திலேயே இது தொடங்கி, அங்குள்ள அதிகாரிகளையும் இது பாதிக்கின்றது. தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுகிறதையும், நியாயமும் நீதியும் புரட்டப்படுகிறதையும் சாலொமோன் கண்டார்.

**5:13-17.காற்றோடு போய்விடும்.**
ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள் என்று இயேசு சொன்னார். (மத். 6:19-21; 19:29.)

**5:18-20 "நன்மையைச் செய், மிகுதியை அனுபவி"**
தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.

**6:1-6 செல்வமும் ஆரோக்கியமும்.**
ஒருவனுக்குத் தேவன் செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார்; அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்குக் குறைவில்லாமல் கிடைக்கும்; ஆனாலும் அவைகளை அநுபவிக்கும் சக்தியைத் தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை; (6:1-2).ஒருவன் அனேக பிள்ளைகளைப் பெற்றும், அதிக செல்வம் இருந்தும், அவற்றை அனுபவிக்க அவனுக்கு சரீர ஆரோக்கிம் இல்லாமல் இருந்தால் அவன் பிறவாமல் இருப்பதே அவனுக்கு வாசி. (6:3-6).

**6:7-9 மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே;** அவன் மனதுக்கோ திருப்தியில்லை. மனிதம்படும் பிரயாசம் எல்லாம் அவனது ஆசையைத் திருப்திப்படுத்துவதற்காகவாகும், ஆனாலும் அவர்களின் ஆசைகள் திருப்திப்படுத்தப்படுவதில்லை. தான்வைத்திருப்பதில் திருப்திப்படுபவனே மகிழ்ச்சியாய் இருக்கிறான். (6:9).

**அர்த்தமற்றது உலகத்தில் வாழ்க்கை : (7:1–12:8)**

வாழ்க்கையானது அர்த்தம் அற்றதாக இருந்த போதிலும் , ஒருவன் ஞானமாக வாழ வேண்டும். சாலமோன் தன்னுடைய ஞானத்தை முன்னேற்ற விரும்பினான்.

**7:1-4 ஒருவனுடைய ஜநநநாளைப் பார்க்கிலும் மரணநாள் நல்லது.** விருந்துவீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான். ஞானிகளின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும்; மூடரின் இருதயம் களிப்பு வீட்டிலே இருக்கும். கிறிஸ்துவிற்காகச் செய்பவைகளே கடைசிவரைக்கும் நிலை நிற்கும்.

**7:5-26 ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்.** (7:5).

- செல்வத்தைப் பார்க்கிலும் ஞானம் மேலானது. (7:11-12).
- ஞானமான மனிதன் தேவையற்றவைகளைத் தவிர்த்து விடுகிறான். (7:16-17).
- இராணுவ வல்லமையைவிட ஞானம் சிறந்தது. (7:19).
- மனிதர்கள் யாவரும் பாவிகளே. பாவத்தை அறிக்கையிட்டு மன்னிக்கப்பட்டு அவருக்காக வாழ்பவர்களே நீதிமாங்கள்.

- ஞானமுள்ள மனிதன் பாலியல் தவறுகளை விலக்கி நடக்கிறான். (7:26).

**8:2-9 இராஜாவுக்கு கீழ்ப்படியுங்கள்**.

நீ கர்த்தருக்கும் ராஜாவுக்கும் பயந்து நட; கலகக்காரரோடு கலவாதே. ஞானமுள்ளவர்களின் புத்திமதிகள் என்னவெனில் நியாயத்திலே முகதாட்சிணியம் நல்லதல்ல. (8:6; நீதி. 24:21-22, ரோம. 13:1-7). எல்லாக் காரியத்துக்கும் காலமும் நியாயமுமுண்டு; ஆதலால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி. (8:7-8; யாக்4:13-15).

**8:10-17 குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படாமல் தப்புவது எப்படி?**

குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படாமல் இருந்த போதிலும், நிச்சயமாக அவர்களின் நியாயத்தீர்ப்பின் நாள் வரும். (அப்17:31; வெளி 20:11-15). தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப்பார்த்து, மனுஷன் கண்டுபிடிக்கக்கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் பிரயாசப்பட்டாலும் அறிய மாட்டான்; அதை அறியலாம் என்று ஞானி எண்ணினாலும் அவனும் அதை அறிந்து கொள்ள மாட்டான் (8:15; 2:24; 3:12-13; 5:18; 9:7). குடும்ப வாழ்க்கைக்கு தேவைகளுக்காக உழைக்க வேண்டும். அதே அளவு சரீரத்துக்கு ஓய்வும் தேவை அதேயளவு கர்த்தருக்கு ஊழியமும் செய்ய வேண்டும்.

**9:1-8 *"*செத்த சிங்கத்தைப் பார்க்கிலும் உயிரோடு இருக்கும் நாய் வாசி *!"***

வாழ்க்கையானது சந்தோசமாகத் தோன்றாவிடினும், நீதிமானும் துன்மார்க்கனும் ஒரேமாதிரியாகவே மரிக்கின்றார்கள். (9:1-3) உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. (9:5) இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை.

(12:7). கிறிஸ்த்தவர்கள் இயேசுக்கிறிஸ்த்துவின் உயிரத்தெழுந்த வல்லமையில் நித்திய ஜீவனைக் காண்கின்றார்கள்.

**9:9-12 "இந்த ஜீவவாழ்வை அநுபவி!"**

மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள் (9:11-12), நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி(9:9) செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய் (9:10) என் நாட்கள் புகையைப்போல் ஒழிந்தது; (5:18-20; யோபு 7:6-7; சங்கீதம். 102:3; 103:14-16; யாக்கோபு 4:13-15). எதைச் செய்தாலும் கர்த்தருக்காக செய்ய வேண்டும். வீண்புகழ்ச்சிக்காகவோ மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகவோ செய்யக்கூடாது.

**9:13-18 ஞானம் நல்லதாக இருந்த போதிலும் அது மறக்கப்படுகின்றது**..

ஞானம் யவற்றைவிடவும் மேன்மையானது, சிலர் இதனைப் பாராட்டுகின்றார்கள், அதிலே ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்; அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான்; ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை.

**10:1-20 சில சமயங்களில் எதுவும் சரியாகத் தோன்றாது**.

பூரணமற்ற உலகம் ஆபத்துக்கள் நிறைந்தது. படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்; அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும். கல்லுகளைப் பேர்க்கிறவன் அவைகளால் காயப்படுவான்; மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும். மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும். (10:11-15) அதிகாரத்தில் இருப்பவர்களும்கூட நம்பத்தகுந்தவர்களல்ல. ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே, ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே; ஆகாயத்துப் பறவை அந்தச் சத்தத்தைக் கொண்டுபோகும், செட்டைகளுள்ளது அந்தச் செய்தியை அறிவிக்கும். (10:16-20).

**11:1-6 துணிவு, பிரதிபலனைத் தரும்** .

இந்த பூரணமற்ற உலகத்தில் துணிந்து முடிவெடுப்பது வெற்றியைக் கொண்டுவரும், அதிகம் முதலீடுகள் அதிக பலனைக் கொடுக்கும். (லூக்6:38). காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான். (11:4) விசுவாசத்தில் நாம் காலடியெடுத்து வைக்கவேண்டும். (11:5) அதிகமாக உழைக்க வேண்டும். (11:6) அப்போது நிறைந்த சன்மானம் கிடைக்கும். உழியத்திலும் சோர்வில்லாமல் சாக்குப்போக்கு சொல்லாமல் உற்சாகமாக உழைக்க வேண்டும்.

**11:7-10 களிப்பு இப்போது பின்பு நியாயத்தீர்ப்பு**.

வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.

**12:1-8 வாலிபர்கள் வயோதிபத்துக்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்**.

நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும், அவரை அண்டிக்கொள். (12:1). மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை. (12:8) வாலிப வயதிலேயே மனந்திரும்பி கர்த்தரை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**பிரயோசனமான வாழ்க்கையின் பிறப்பு. (12:9-14)**

**12:9-14. பயந்து அவருக்கு கீழ்ப்படி.**

தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். (12:13)

| ஞானத்தின் வழிகள். |
|---|

| | கர்த்தர் இல்லாத எதுவும் மாயையாகும் |
|---|---|
| கர்த்தர் இல்லாத கற்றல் | குறைகாணப்படும்(1:7, 8) |
| கர்த்தர் இல்லாத பெருந்தன்மை | துக்கமானது. (1:16-18) |
| கர்த்தர் இல்லாத சந்தோசம் | ஏமாற்றம்.(2:1, 2) |
| கர்த்தர் இல்லாத முயற்சி | வெறுப்பு நிறைந்த வாழ்க்கை(2:17) |
| கர்த்தர் இல்லாத தத்துவ ஞானம் | வெறுமையானது. (3:1-9) |
| கர்த்தர் இல்லாத நித்தியம். | நிறைவேறாதது. (3:11) |
| கர்த்தர் இல்லாத வாழ்வு | கொடுமையானது(4:2, 3) |
| கர்த்தர் இல்லாத மதம் | பயமுள்ளது(5:7) |
| கர்த்தர் இல்லாத செல்வம். | தொல்லை நிறைந்த்து. (5:12) |
| கர்த்தர் இல்லாத வாழ்வு | தோல்வியானது. (6:12) |
| கர்த்தர் இல்லாத ஞானம் | நம்பிக்கை அற்றது (11:1-8) |
| . | கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பமாகும். |
| கர்த்தருக்குப் பயப்படுதல். | திருப்தியானது. |

நன்றி கர்த்தாவே

திராணி